குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல் 1. | புதுச்சேரி, 17-2-59 செவ்வாய் | இசை: 37

தில்லி ஒழிக!

செந்தமிழ் நாட்டைத் தில்லி ஒழிக்குமுன்
தில்லிதன்னை ஒழிக்க வேண்டும் நாம்

குந்திச் சிறிய கதைபேசித் திரியும்
குள்ளத் தலைவர் குற்றம் செய்தனர் (செந்)

இந்திச் செய்தியில் நடந்த தெப்படி?
இன்பத் தமிழை மாய்ப்பதும் கண்டோம்
பைந்தமிழ் நாட்டுக் குள்ள அதிகாரம்
பத்தில் ஒன்றும் பலித்ததா நமக்கு? (செந்)

நாட்டினை ஆண்ட தமிழரா அடிமைகள்?
காட்டு மிராண்டிக் கழுதையா ஆள்வது?
நாட்டையும் மொழியையும் நசுக்குதல் கண்டும்
நாய்வாழ்க் கையைநாம் நாடுதல் நல்லதா? (செந்)

புலவர் உள்ளனர் எதற்குத்தாம் உள்ளனர்?
பொன்னுளார் உள்ளனர் எப்பயன் கண்டோம்?
கலைஞர் வாழ்கின்றார் எதற்காக வாழ்கின்றார்?
கைவிலங் குக்கு மெருகு போடவா?

சோறுண்ணு கின்றோம்! நாயுண்ண வில்லையா?
துன்ப மற்ற தலைமுறை செய்வோம்
ஆறு பாய்ந்தெனத் தமிழர்கள் பாய்க
அழிக்கும் பகையை அழிப்ப தற்கே! (செந்)

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௯௦ மாசி ௫

முற்றுகை இடுவோம்!

தமிழர் வெள்ளம் பெருக்கெடுக்க வேண்டும். ஆகாஷ்வாணி கிளம்பும் இடத்தை முற்றுகையிட வேண்டும்.

இரண்டு கேட்க வேண்டும். ஆகாஷ்வாணி நிலையம் இருக்கவேண்டுமா? ஒழியவேண்டுமா? என்று.

இப்படிச் செய்யத் தமிழர்களால் தமிழர் தலைவர்களால் ஆகவில்லை எனில் தமிழர் வெள்ளம் கடல் வெள்ளத்தோடு கலந்துவிட வேண்டும் - தமிழர் வாழ்வுக்கே திருவாசகம் பாடிவிடவேண்டும்.

மானமிழந்தபின் வாழாமை முன்னினிதே அன்றோ!

நம்பிள்ளை, தமிழர்களின் படித்திருவாளன் அரங்கரத்தினம் உயிர் விடுகின்றான், தமிழர் வாழ்க்கைக்கே ஒரு தேர்தலை ஏற்படுத்தி விட்டான்.

நானிலம் நம்மை நோக்கிக் கொண்டிருக்கின்றது. அது நம்மைக் கான்றுமிழவிடலாமா? வடக்கத்தியான் நம் வீரத்தை அளந்து பார்க்கின்றான்: நாம் பேடிகள் அல்லர் என்பதைக் காட்டவேண்டாமா?

ஆண்டதாகச் சொல்லிக் கொள்ளுகின்றோம்-நாகரிகம் கண்டவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றோம் - வீரர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றோம்.

எழுவோம்! தூங்கமாட்டோம்.

★○★

ஆட்சி சொல் அகராதியில் உள்ள சொற்களையே அரசாங்கம் உபயோகிக்க வேண்டும்.

சென்னை அரசினர் உத்திரவு பிறப்பித்துள்ளனர்.

மாநில அரசாங்கம் வெளியிட்டுள்ள ஆட்சி சொல் அகராதியில் உள்ள தமிழ்ச் சொற்களையே எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் உபயோகிக்க வேண்டும் என்று உத்தரவுபிறப்பிக்கப்படும் என்று மேல்சபையில் சர்க்கார் கட்சித் தலைவரான மந்திரி திரு. ஆர். வெங்கட்ராமன் நேற்று கேள்விநேரத்தின் போது தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக வித்துவான் திரு. டி. முத்துக் கண்ணப்பர் கேள்வி எழுப்பியிருந்தார். தற்போது ஆங்கிலத்தில் உள்ள ஆட்சி சொற்களுக்கு நேர் பொருள் தரக்கூடிய தமிழ் ஆட்சி சொற்களை முடிவாகத் தயாரிப்பதற்கென்று மாநில அரசாங்கம் ஒரு குழுவை நியமித்துள்ளது. இக்குழுவில் அங்கம் வகிப்போர் யார் யார் என்று வித்துவான் முத்துக் கண்ணப்பர் கேட்டார் ரெவின்யூபோர்டு மெம்பர் திரு. எஸ். வெங்கடேஸ்வரன் தலைமையில் பதினெட்டுப்பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறி அவர்களின் பெயர் விவரங்களையும் மந்திரி வெளியிட்டார். இக்குழுவில் பாதிப் பேருக்குமேல் அரசாங்க அலுவலர்களாக உள்ளனர் இதர அதிகாரப் பற்றற்ற அங்கத்தினர்கள் சென்னையில் நடைபெறும் அக்குழுவின் கூட்டங்களில் வந்து கலந்துகொள்ள பிரயாணப்படி வழங்கப்படுகின்றதா? இப்படி வழங்கப்படாததால்தான் அவர்கள் வந்து கலந்துகொள்ளமுடியாமல் இருக்கின்றதா? என்றும் திரு. முத்துக்கண்ணப்பர் கேட்டார்.

இப்போது இக்குழுவின் உறுப்பினர்களுக்குப் பிரயாணப்படி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதாக மந்திரி திரு, வெங்கட்ராமன் தெரிவித்தார் ஆட்சி மொழி அகராதிக் குழுவின் மற்ற உறுப்பினர்களின் பெயர் விவரம் வருமாறு:

திரு, எம். அனந்தநாராயணன் சட்டக்கல்வி இயக்குநர்.

திரு, டி. கே. சங்கரவடிவேலு நிலவரி இலாகா செயலாளர்,

திரு, என். டி. சுந்தரவடிவேலு கல்வி இலாகா இயக்குநர்

திரு, எம். ஆர். பெருமாள் முதல்வர் ஆசிரியர் கல்லூரி

திரு, என். விநாயகம் அரசாங்க மொழி பெயர்ப்பாளர்

திரு, பி. கோதண்டராமன் பத்திரிகையாளர்

திரு, சி. அமிர்த கணேசன் செஞ்சிலுவைச் சங்க செயலாளர்

திரு, ரா. பி. சேதுப்பிள்ளை பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர்

திரு, கே. கோதண்டபாணி ரயில்வே சர்வீஸ் கமிஷன் உறுப்பினர்

திரு, எம். ஏ. குத்தாலலிங்கம் வைத்தியத் துறை நிபுணர்

திரு, எ. அருளப்பன் செயின்ட் சேவியர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் பாளையங்கோட்டை

திரு, எஸ். ராமசாமி சென்னை மாநிலத்தமிழ்ச் சங்கத் தலைவர்

திரு, எ. முத்தையா பொருளாதாரப் பேராசிரியர் பச்சையப்பன் கல்லூரி சென்னை

திரு, ஆர். வி. கிருஷ்ணய்யர் ஓய்வுபெற்ற சென்னை சட்டசபை செயலாளர்

டாக்டர் திரு, மணவாள இராமாநுஜம்

திரு, இ. எம். சுப்பிரமணியம்பிள்ளை செயலாளர் மாநில தமிழ்ச்சங்கம்

புதிய ஆட்சிச்சொல் அகராதியில் கீழ்க் கண்டவைபோன்ற தமிழ்ச்சொற்கள் உபயோகிக்கப் பட்டிருப்பதாக மந்திரி விளக்கினார்

டிப்போ – பண்டகசாலை
நோட்டீஸ் – அறிவிப்பு
ஆபீஸ் – அலுவலகம்
ஆக்ட்டு – சட்டம்
பிரசிடெண்ட் – தலைவர்
மெம்பர்கள் – உறுப்பினர்கள்
இன்ஸ்பெக்ஷன் – தணிக்கை, பார்வை
மெட்டல்ரோடு – கற்சாலை
வார்டு – பகுதி

தமிழ் புகுத்தப்பட்டுள்ள அரசாங்கஅலுவலகங் களில் உள்ளகுமாஸ்தாக்கள் இப்பதங்களைத் தங்கள் அன்றாடப் போக்கு வரத்துகளில் பயன்படுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளார்கள். மாநில ஆட்சிமொழி அமுல் சட்டத்தின்கீழ் நியமிக்கப் பட்டுள்ள விசேஷ அதிகாரி அண்மையில் தம் பொறுப்பை மேற்கொண்டுவிட்டார். அவர்பல்வேறு ஊர்களுக்கும் நேரில்சென்று ஆங்காங்குள்ள அலுவலர்களுக்குத் தமிழில் எழுதுவதில் எதிர்ப்படும் சிக்கல்களைத் தீர்த்துவைக்கிறார் என்று மந்திரி திரு, வெங்கட்ராமன் மேல்சபையில் நேற்று திரு, முத்துக் கண்ணப்பரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"விடுதலை"
12 – 2 – 59

கட்டண விவரம்

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் பதினைந்துகாசு (0 – 15) அஞ்சல் தலைகள் அனுப்புக.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி ௨௫.

இடம் : பாண்டி நாட்டின் எல்லை,

காலம் : நள்ளிரவு.

உறுப்பினர் : சோழ நாட்டுப்படையும் பாண்டி நாட்டுப் படையும்.

காட்சித் தலைப்பு :

ஓடும்படை

நிகழ்ச்சி : சோழன் மகனும், சோழன் படைத் தலைவனும் கூட்டி வந்த படை பாண்டிய நாட்டுப் புறத்தே நிற்க. - அதைப் பாண்டியன் படை நெறுங்குகின்றது.

சோழன் மகன் : நாம் இப்போது என்ன செய்யவேண்டும் மாமா?

படைத் தலைவன் : பாண்டியன் படையை எதிர்ப்பது நம் நோக்கமன்று. அப்படை நம் படையைத் துறத்திக் கொண்டே வரும்படி நாம் பின்நோக்கி இறங்கவேண்டும். வெளிப் படையாகச் சொல்லவேண்டுமானால் நாம் ஓட வேண்டும் நம் நாட்டை நோக்கி! பாண்டியன் படை நம்மைத் துறத்தியபடியே. வர நாம் நம் நாட்டில் ஒருபுறம் பதுங்கிக் கொள்ளவேண்டும். உன் தந்தை கோப்பெருஞ் சோழனார்க்கும் பாண்டியன் படைக்கும் சண்டை மூளட்டும். இந்த நிலையில் கோப் பெருஞ்சோழனார் தோற்பது உறுதியல்லவா அதைத்தானே நாம் எதிர்பார்க்கின்றோம்? எப்படி!

சோழன்மகன் : நன்று! நன்று!

(பாண்டியன் படை துரத்துகின்றது சோழன் மகன் படை ஓடுகின்றது.)

காட்சி ௨௬.

இடம் : சோழ நாட்டின் ஒருபுறம்.

காலம் : அதிகாலை.

உறுப்பினர் : கோப்பெருஞ்சோழனின் படைத் தலைவன், கோப்பெருஞ்சோழன் மகன் இளங்கோச் சோழன், சோழன் படை.

காட்சித் தலைப்பு :

இருதலைக் கொள்ளி எறும்பு

நிகழ்ச்சி : கோப்பெருஞ் சோழனின் சிறு படைக்கும், துறத்திவந்த பாண்டியன் படைக்கும் இடையில் சோழன் மகன் படை அகப்பட்டுக் கொள்ளுகிறது.

இளங்கோச் சோழனும் படைத் தலைவனும் மாற்றுடை அணிந்து சோழ நகர்ப்புறம் நோக்கி ஓடி வருவதை ஒற்றர் பார்த்து விடுகின்றார்கள்.

ஒருபுறம்.

ஒற்றர்- (கோப்பெருஞ்சோழனை நோக்கி) வணக்கம். நம் படைக்கும் பாண்டியனார் படைக்கும் இடையில் அகப்பட்டுக் கொண்ட தங்கள் மகனார் படையைத் தத்தளிக்கவிட்டுத். தங்கள் மகனாரும், படைத் தலைவரும் மாற்றுடையோடு திறலூர்ப் பொது விடுதியில் ஒளிந்து கொண்டார்கள்.

அங்குத் தத்தளிக்கும் படையும் எப்படி யாவது இருபுறப் படைகளுக்கும் தப்பி நகர் நோக்கி ஓடிவந்துவிட முயலுகிறது.

கோப்பெருஞ் சோழன்- என் மகனையும். படைத் தலைவனையும் பொது விடுதியிலேயே சிறைப்படுத்துக. அவர்களின் படையையும் வளைத்துநொறுக்குங்கள். உடனே என்கட்டளை நிறைவேற வேண்டும்.

(ஒற்றர் ஓடுகின்றார்கள்)

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

அவி

அவிதல், அவியல் என்பனவற்றின் முதனிலைத் தொழிற்பெயரே அவி என்பது. வேவுதல் என்பது அதன் பொருள்.

இனி, அவி என்றது தொழிலாகு பெயராய் வேவுதல் உடைய ஒரு பொருளைக் குறித்தது. அந்த வேவற்பொருள் எது? தேவர் உணவு என்று மழுப்பற் பொருள் கூறிக் கொண்டிருக்கின்றனர் ஆரியச் சார்பினர். ஆடுமாடுகளின் ஊன் என்றும் அவற்றின் நிணம் என்றும் வெளிப்படையாகவா கூறுவார்கள்?

அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று என்ற குறட்பாவுக்குப் பொருள்கூறவந்த பரிமேலழகர் அவி என்பதற்கு நெய் முதலியவைகள் என்று கூறி மழுப்புகின்றார். கொலை வேள்வியும், தம் இனத்தார்க்கு உள்ள புலால் வெறியும் பரிமேலழகர்க்கே நாணத்தை உண்டாக்குகின்றன. வெளிப்படைப் பொருளை அவரிடம் எப்படி எதிர்பார்க்கமுடியும்!

கா. சுப்பிரமணியனார் (எம். எல். பிள்ளை) திருக்குறள்-பொழிப்புரையுள் அவி என்பதற்கு ஊன் என்றே பொருள் கூறியருளியுள்ளார்.

ஆட்டைப் பல பார்ப்பனர் அமிழ்த்திப் பிடித்துக் கொள்வார்கள். அதன் விதையைப் பிசைந்து உயிர் போக்குவார்கள். மற்றும் சில கொலைகாரப் பார்ப்பனப் பசங்கள் எதிரில் உள்ள தீயில் அதை எடுத்துப் போடுவார்கள் அந்த ஆட்டின் நிணமே-கொழுப்பே அத்தீயை மூண்டெழச் செய்கின்றது. அந்த நிணத்திலேயே அந்த ஆட்டுடல் வேகின்றது. இந்தத் திருப்பணியில் பெரிதாக எண்ணப் படுவன, இவ் விரண்டுமே: ஒன்று தீ எரியச்செய்கின்றது நிணம். கறியை வேகச் செய்கின்றது நிணம் என்பது மற்றொன்று. இவைகளைக் கருதித்தான் அவி "சொரிந்து" என்றார் வள்ளுவர்.

இனி, அவி என்ற சொல்லை வடமொழி நூல்களில் கண்ட சில தமிழ் விபூடணர்: இது வடமொழிச் சிதைவென்று கூறி மானமிழப்பர். தமிழ் நூலில் தமிழ்நாட்டில் அவி எனக்காணும் தமிழர் தமிழிலக்கணத்தால் - தமிழ்மனத்தால் அச்சொல்லை நோக்க வேண்டுமேயன்றி ஆரிய மனத்தினின்று நோக்குவது என்ன காலக் கோளாறோ நாம் அறியோம் எனவே, அவி தூய தமிழ்க் காரணப் பெயர் எனக் கடைப்பிடிக்க.

கோழிப்போர்!

ஆர்த்தது கோழி போர்க்களத்தே
அணுக்குண்டெல் லாம்என் கணுக்காலின் கீழே
அறந்தவறேன் போர் அறந்தவறே னென்றே
ஆர்த்தது கோழி போர்க்களத்தே

பாருக் கொரு வேந்தன்
தேருக்கொரு பாகன் நான்!
பார்'என் றெதிர்த்த மற்றொரு கோழி
ஓரடி வாங்கிமற் றோரடி தந்ததுமார்பில்
ஆர்த்தது கோழி போர்க்களத்தே!

எற்றும் கோட்டு முட்கள்
ஈட்டிக்கோர் ஈட்டி - ஒன்று
சிறந்த கழுத்துக் கிழிந்தும் எதிர்த்தே
இறந்தது தன்புகழ்க் கிலக்கியம் வைத்தே!
ஆர்த்தது கோழி போர்க்களத்தே!

இனி வீழ்ச்சியில்லை

பொன்முடி, கண்ணம்பாளையம்.

முழங்குகின்ற கடல்வேலிப் பேருலகை முன்னாள்
முத்தமிழால் ஆண்டிருந்த மூவேந்தர் கண்ட
பழங்கழக அரங்கினிலே, செழும்புலவர் தந்த
பாவணிகள் பூண்டுநடம் பயின்றிருந்த அன்னாய்
விழுங்கவரும் கடலுக்கும் வேதமொழி யினர்க்கும்.
மீறிவரும் அழுக்காற்றால் வெங்கொடுமை நெஞ்சம்
அழுங்குகின்ற பகைவோர்க்கும் நல்வரவு தந்த
அறப்பண்பால் அருள்நெஞ்சால் தாழ்ந்தனையே!
[அந்தோ.

சங்கங்கள் மூன்றழிந்து போனகதை யொன்றோ
சாகாத இலக்கியங்கள் சாய்ந்தகதை யொன்றோ
மங்காத பேராட்சி மாய்ந்தகதை யொன்றோ
மனுவாதி சாத்திரங்கள் மலிந்தகதை யொன்றோ
சிங்கங்கள் போல்வீரஞ் சிறந்திருந்த மக்கள்
சிறியவருக் கடிமைசெயச் சென்றகதை யொன்றோ
பங்கங்கள் அவலங்கள் நின்வரலா றாகப்
படிந்துவந்த காலத்தை எண்ணியெண்ணி
[நைந்தேன்

"பாழ்பட்டு நிற்போமா? இனியெங்கள் வாழ்வைப்
பண்பட்ட தாக்கோமா? தமிழ்இந்நாள் உற்ற
தாழ்வகற்ற முனையோமா? அறிவுவாள் ஏந்திச்
சமராடி வெல்லோமா? தென்னாட்டில் வந்து
காழ்விட்டுக் கிளைவிட்டுச் சாதியெனும் நச்சுக்
காய்விட்டுக் கனிந்திருக்கும் மூடத்த னத்தை
வீழட்டும் எனவீழ்த்தி வெற்றிக்க ளிப்பில்
மேலோங்கி ஒற்றுமையாய் வாழோமோ?" என்று.

நற்றமிழர் கடல்போலப் பொங்கியெழு கின்றார்.
நாவலர்கள் பாவலர்கள் ஆராய்ச்சி யாளர்
கற்பிக்குங் கணக்காயர் கலைவல்லார் கூடிக்
கழகங்கள், 'புலவர்குழுக்' காண்கின்றார்! உலகப்
பற்றுவிட்ட துறவிகளும் நின்மீதிற் கொண்ட
பற்றுதலால் தொண்டுசெய விழைகின்றார்; எம்மை
ஏற்றிவந்த இருள்நெஞ்சப் பகைவர்குலை நடுங்க
எழுந்ததுகாண் விடிவெள்ளி தென்னகத்து வானில்

வடமொழியும் ஆங்கிலமும் கலந்தெழுதித் 'தமிழை
வளர்க்கின்றோம்; செய்தித்தாள் நடத்துகின்றோம்'
[என்ற
கெடுமதியார் போயொடுங்கத் தனித்தநறுந் தமிழில்
கிளர்ந்தெழுந்த நல்லறிஞர் செய்தித்தாள் கண்டார்

நாட்டைமீட்பீர்!

பட்டுக்கோட்டை, இராசேந்திரன்.

மண்டுபுகழ்த் தமிழ்மொழியை மேம்படநன்
கறிந்தவர்கள் தமிழுக் கென்றே
தொண்டுசெய வரவேண்டும்; சாதிமதம்
எனும்நோயைத் தொலைக்கும் வன்மை
கொண்டுசெயல் படவேண்டும்: இலக்கியங்கள்
நன்னூற்கள் பலவாக் கிக்கற்
கண்டுநிகர் தமிழ்செழிக்கக் கழகங்கள்
மன்றங்கள் காணல் வேண்டும்!

எடுத்தெடுத்தே இல்லார்க்குத் தந்தவரின்
வழிவந்தோம் இன்றோ இங்குக்
கொடுப்பீரோ எனப்பிறர்பால் கையேந்தும்
புதுப்பழக்கம் கொண்டோம்; சில்லோர்
உடுத்தற்கும் உடையற்றுத் தம்கையே
தமைக்காக்கும் உடையாய்க் கொண்டார்!
வடுவற்ற செந்தமிழால் வளமற்ற
இந்தியினை வரவேற் கின்றார்!

வாடாத நமதுபுகழ் வாடுவதோ?
நம்சீர்த்தி வானை முட்டும்
கோடாதல் என்றைக்கோ குளிர்தென்றல்
தவழ்நாட்டில் முன்னர் வந்து
நாடாத மொழிஇன்று நாடுவதோ
நரிக்கூட்டம் நந்தம் நாட்டை
வீடாக்கிக் கொள்ளுவதோ? விழித்தின்றே
எழுவீர்நம் நாட்டை மீட்பீர்!

படக்காட்சி நாடகங்கள் இசையரங்கஞ் சார்ந்தோர்
பழமையொடு புதுமைநெறிப் பண்புணர்த்து
[கின்றார்.
தடுப்பாரும் இனியுண்டோ நின்புகழை? இனிமேல்
தாழ்வில்லை! ஒருநாளும் வீழ்வில்லை யம்மா!

மன்பதையின் கலைவீடாய்! நாகரிகப் பைங்கூழ்
வளர்கின்ற நல்வயலாய்! மக்களினங் கொண்ட
துன்பங்கள், வறுமையெனும் தொழுநோய்கள்
[போகத்
தொண்டாற்றும் மருந்தகமாய் அறம்பொருள்க
[ளுடனே
இன்பத்தை ஒளியாக்கி வாழ்வுக்க லத்தை
இயக்குமொரு கலங்கரையின் நல்விளக்காய் ஓங்கும்
தென்னகத்தில் உன்னினத்தார் செழித்தினிது
[வாழ்வர்
தேவியுனக் கினிவீழ்ச்சி யில்லையிது திண்ணம்!

∝★∞

நல்லாதனாரின் நல்லறிவுரை

இரா. தி. இராசன்

முத்தமிழை முறைபோகாது எத்திக்கும்; தித்திக்கும் வண்ணம் சிந்தித்து தமிழுலகிற்கிந்த சிறப்பும் சீர்மையும் முச்சங்கங்கள் அளித்த நூல்கள் படைத்த பாவலர் பாற்படும் என்பது தமிழ் கற்ற பெருமக்கட்குத் தெள்ளிதின் விளங்கும்!

அத்தகு சிறப்பையும் சீர்மையையும் ஒருபுடை ஏந்தி, தமிழின் தணியா சுவையினை ஓர்ந்து ஓர்ந்து தமிழுலகிற்கு உழைத்துத் தமிழுலகின் சீரினைத் தரணிக்குணர்த்த தத்தம் புலமை வன்மையையும் கலந்தளித்த பன்னூல்களில், சீர்மிக ஏர்மிக கருத்தோவியமென உருப்பெற்று கடைச்சங்கம் பெற்ற பதினென் கீழ்கணக்கு நூல்களில் பன்னிரெண்டாம் இடத்தினைப் பெற்று, முத்தான மூன்று கருத்துக்களை, மூவா மருந்தென உலகிற்குணர்த்த ஒவ்வொரு வெண்பாவிலும் பதித்து, பைந்தமிழ்பாவலனின் நிறைகோல் மாட்சிமைக்கும் நிலைக்களனாய் நின்றிலங்கும்நல்லறிஞர் நல்லாதனார் நற்றமிழுலகிற்கு நனிமிக அருளிய "திரிகடுகம்" சீரியதோர் கருத்தைச் சிறப்புற செப்பி நிற்கிறது!

வீரத்தின் விளைநிலமாய் பண்பினுயர் முகடாய் கல்தோன்றி மண்ணாக மாறாக் காலத்தே முன்தோன்றி புகழெய்திய புவிக்கே முதற்குடியாம் தமிழ்க்குடி மக்களுக்கு கருத்துக் கனிகளை அழகுற நூறு வெண்பாக்களால் நுண்ணிதின் தெளிந்தளிக்கும் "திரிகடுகம்", உடனிருந்து குடிகெடுக்கும் குள்ளநரிக்குணப் பார்ப்பனர் பண்பினையும் நம்மவர் நடந்து கொள்ளும் முறையையும் முறையாகக் கூறுவதே அச்சீரிய கருத்து!

வேதியனென வேடந்தாங்கி ஆதியிற்றோன்றிய பெருங்குடியைச் சாதியெனும் சண்டாளத்தனத்தால் கூறிட்டு, தனக்கு பிராமணன் எனப் பெயரிட்டு, உழைக்காமல் உண்ண எண்ணி "பசுப்போல்வா பார்ப்பனர்" எனவும் பறைசாற்றும் பார்ப்பனர், சூழ்ச்சியெனும் திரைமறைவில் தமிழ்ப் பெருமக்களுடன் நட்பு பூண்டு நயவஞ்சகம் புரியும் அந்நரிக்குணத்தோரின் தன்மைகண்டு, தமிழ்ப் பெருமக்கட்கு சமணத் துறவி நல்லாதனார் அறிவுரை தருகின்றார் ஓர் வெண்பாவிலே;

கழகத்தால் வந்த பொருள்கா முறுமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் - ஒழுகல்
உழவின்கட் காமுற்று வாழ்தல்இம் மூன்றும்
அழகென்ப வேளான் குடிக்கு.

இப்பாவின் இரண்டாம் அடியிலே,

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்பதை யுணர்ந்து "உழவே தலை"யென வாழும் தமிழ்க்குடி மக்கட்கு; அன்பால், தமிழ்க்குலத்தில் உதித்த பற்றுதலால்; பழகிடுவோரெல்லாம் பாங்கர்களல்லர்; உரையாடுவோரெல்லாம் உறுதோழர்களல்லர்; வெளுத்ததெல்லாம் பாலல்ல, மின்னுவதெல்லாம் பொன்னல்ல, ஒளிவீசுதெல்லாம் ஒண்முத்தல்ல மனித குலத்தில் உதித்த பார்ப்பனரும் பாங்கர்களாக்கத் தகுதியல்லர் என்பதை வெள்ளிடைமலையாக, பன்மீன் நடுவண் மிளிரும் பான்மதியாக உள்ளங்கை நெல்லிக்கனியாக துணிந்துரைக்கிறார் சமணத்துறவியார்!

"பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகல்" என்ற சமணத்துறவியாரின் கூற்று, உணர்ந்து பட்டதனால் உதித்த உன்னதக் கருத்தே!

கண்டார் அத்தீயோர்களின் பண்பினை– உணர்ந்தார் அவ்வன்னெஞ்சகர்களின் உள்ளப் பாங்கை! உடனே உள்ளத்துதித்த கருத்தை வெண்பாவில் வடித்து நம்மவர்க்கு அறிவுரை தருகிறார், பார்ப்பானிடம் பழகாதே என்று! தவறிப் பழகிடினும் என்ற நிலைவரும்போது தீப்போல் ஒழுகல்" என்று நலன் கருதிக் கண்டிக்கிறார்!

"நச்சரவம் - நயவஞ்சகப் பார்ப்பான்" – இவையிரண்டில் எதுதீது என்பதற்கு விடையிறுக்கிறார் இலைமறைகாயாக நயவஞ்சகப் பார்ப்பான் நச்சரவத்தினும் கொடியோன் என்று!

ஆகவே நம் இனம்வாழ, நம் மொழிவாழ, நம் வழக்குவாழ கி. மு. 2000 தொட்டு இற்றை வரை உள்ள வரலாற்றை ஆய்ந்து அறிந்து தெளிந்து குளிர்ந்த சிந்தையோடு உயர்ந்து சிறந்து மிக்கோங்கி வாழப் பார்ப்பனர் பண்பு உணர்ந்து நல்லாதனார் நல்லறிவுரையை ஏற்போமாக!

<★>

முதல் முழக்கம்செய்த கபிலர்

தொகுப்பு: சென்னை, மணவழகன்

[நாடின்றி, நல்லமனமின்றி, ஆடுமாடுகள் மேய்த்தவண்ணம் நம்நாட்டில் புகுந்த பார்ப்பனர்களால், திந்தமிழகம் எருமை புகுந்த குளமாயிற்று; பாம்பு புகுந்த பூஞ்சோலையாயிற்று. இதனைக் கண்ட அற்றைநாள் சிர்திருத்தப் பெரியார் கபிலரென்பார் பார்ப்பனர்களுக்கு எச்சரிக்கைவிடுத்தார். அதுதான் தமிழகத்தில் எழுந்த முதல் முழக்கமாகும். கபிலரின் அறிவு மொழிகளை ஈண்டுக்கண்டு தெளிக.]

கேண்மின்

பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின்!

திவசப் புரட்டு

"இறந்தவ ராய்உமை இல்லிடை யிருத்திப்
பாவனை மந்திரம் பலபட உரைத்தே
உமக்கவர் புத்திரர் ஊட்டின போது
சுடுபசியாற் குலைந் தாங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது கண்டதார் புகலீர்!
அருந்திய உண்டியால் யார்பசி கழிந்தது?

மேலைநாடுகள் பொலிவுற்றதற்குக் காரணம்

"ஓட்டியர் மிலேச்சர் ஊணர் சிங்களவர்
இட்டிடைச் சோனகர் யவனர் சீனர்
பற்பல நாட்டினும் பார்ப்பார் இலையால்;"

சாதி நஞ்சினைப் புகுத்தினர்

"முற்படைப்பதனில் வேருகிய முறைமை போல்
நால்வகைச் சாதிஇந் நாட்டில்நீர் நாட்டினிர்!"

உயர்வுக்கு உரைகல் எது?

"மேல்வகைக் கீழ்வகை விளங்குவது ஒழுக்கால்;"

திருமணத்திற்குச் சாதி தேவையா?

"பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே,
அவவிருசாதியின் ஆண் பெண் மாறிக்
கலந்து கருப்பெறல் கண்ட துண்டோ?
ஒருவகைச் சாதியார் மக்கட் பிறப்பினில்
இருவகையாக நீர் இயம்பிய குலத்துள்
ஆண் பெண்மாறி யணைதலும் அணைந்தபின்
கருப்பொறை யுயிர்ப்பதுங் காண்கின் றிலிரோ?

ஆடுமாடுகளுக்கு சாதி; மனிதர்களுக்கு உண்டா?

"பெற்றமும் எருமையும் பேதமாய்த் தோன்றல் [போல்
மாந்தரிற் பேதமாம் வடிவுஎவர் கண்டுளார்?"

தெற்கும் வடக்கும்

"தென்திசைப் புலையன் வடதிசைக் கேகுற்
பழுதற ஓதிப் பார்ப்பான் ஆவன்;
வடதிசைப் பார்ப்பான் தென்திசைக் கேகின்
நடையது கோணிப் புலையன் ஆவன்."

சேற்றில் செந்தாமரைகள்

"பூசுரர்ப் புணர்ந்து புலைச்சியர் ஈன்ற
புத்திர ராயினோர் பூசுரர் அல்லரோ?"
"பிரமற்குக் கூத்திவயிற்றிற் பிறந்த வசிட்டரும்
வசிட்டர்க்குச் சண்டாளி வயிற்றிற்பிறந்த சத்தியரும்
சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்துபிறந்த [பராசரும்
பராசர்க்கு மீன்வாணிச்சி வயிற்றிற்பிறந்த [வியாசரும்,
வேதங்கள் ஓதி மேன்மைப் பட்டு
மாதவர் ஆகி வயங்கின னன்றோ?"

ஒன்றே!

"குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே,
வழிபடு தெய்வமும் ஒன்றே."

அறிவுரை

"முன்னோர் உரைத்த மொழி தவறாமல்
எந்நாளா யினும் இருப்பவர்க் கிட்டுப்
புலையுங் கொலையுங் களவுந் தவிர்த்து,
நிலைபெற அறத்தின் நிற்பதை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி யுரைப்பது பிழை யெனப்படாது."

— கபிலரகவல்

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."

— குறள் 134

வெண்பா - வினாவிடைப் பகுதி

இவ்விதழின் கண் இடமின்மையால் வெண்பா வினாவிடைப் பகுதி நிறுத்தப்பட்டுள்ளது. அடுத்த இதழில் இடம்பெறும். நேயர்கள் பொருத்தருள்க.

- அமைச்சர்

துள்ளுநடை போட்டான்!

< தில்லை-மதுசூதனன் >

புதுக் குடி புகுந்த பூவிளம் தம்பதிகள். அவனோர் எழுச்சிமிக்க இளங்காளை. வெண்மனம் படைத்த அழகுத் தங்கப்பதுமை அவள். இரண்டாம் நாள் இரவன்று ஓடோடி வந்து கதவொலி செய்தான் பரபரப்புடனே அக்கதவம் திறந்து அவனைக் கண்டு மனம்களிந்து 'எத்துணை நாழிகை அத்தான்' எனக் கூச்சமுடன் சொல்லி உள் சென்றுள் தொடர்ந்தஅவன்,

கோதை இனி மாதக் கணக்கும் ஆண்டுக் கணக்கும் அன்றோ கணிப்பாய்'' என்றான்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பதைபதைத்தாள் அவள். அவனை மெய்தழுவிக் குந்தவைத்து,

"கண்ணே! கழகத்தின் கட்டளையும் என் கடமையுமாம் அது, உன் தமிழ்ப் பெண்மையின் வீரம் வெளிப்பட வேண்டிய நேரம் இது. ஆயிரமாயிரம் தோள்களிலே என்தோள்களையும் சேர்த்து விடு, ஈரோட்டுப் பாதையிலே இயக்கப் பணிபுரிய என்னை அனுப்பிவிடு" என்றான்.

"அத்தான் நேற்றுத்தான் குடிவந்தோம்; இன்று இத்துணை பெரும் பிரிவா" என்றவள் விம்மினள். அத் தமிழச்சி அவனைத் கெஞ்சித் தடுக்கவில்லை. அவனுக்கு விடைகொடுக்க; மனத்தைத் திடப்படுத்திக் கொண்டவள்போல் விம்மினள். அவனோ, உளம்கனிந்து ஆரத் தழுவிக்கொண்டான் அவளை.

"அன்பே! அதோ பார்! உச்சியில் எரியும் விளக்கு! அதுதான் நம்மூர் பெரிய கோவில். கலைச் செல்வத்தின் இருப்பிடம். தமிழன் பழம் புகழைப் பரக்கப் பாடி நிற்கும் ஓர் நிலைச் சாசனம் அது. அங்கு நான் காண்பது நான் உடைத்தெரிந்த ஆண்டவனை அல்ல. தமிழகம் வாழ்ந்த உயர்ந்த வாழ்வினைக் காண்கிறேன். தமிழன் தோளையும் மார்பையும் நிகர்த்த எத்துணைக் கருங்கற்கள் மலைகளையே காணமுடியாத இப் பக்கத்தில் இவைகளை எங்கிருந்து எப்படி கொண்டுவந்தான். வசதியான ஊர்திகளும் ஆண்டுக்கிடையாதே. இருபெரும் மலைபிளந்தாலும் இத்துணைக் கற்கள் ஆகுமா? இது கட்ட எங்ஙனம் முடிந்தது அவனால். எவ்வளவு செல்வம் மக்கள் கையில் மிகுத்திருந்தால் அவர்கள் இக்கோவில்களை எழுப்ப ஒப்பி இருப்பார்கள் மக்கள் பஞ்சத்தையும் பிணியையும் நினைத்திருக்க முடியுமா? அத்தமிழ் மன்னர்கள் எவ்வகையிலும் மக்கட்குக் குறை வைக்கவில்லையே. ஆடலையும் பாடலையும், சிற்பத்தையும், சித்திரத்தையும் அவன் வளர்த்திருந்தால் எந்த நிலையில் நாட்டு மக்கள் இருந்திருக்கவேண்டும்? கடல்வழி வாணிபத்தைப் பெரும்படியாகப் பெருக்கினனே. இளங்கோ காவிரிப் பூம் பட்டணத்தைச் சொற் சித்திரத்தில் வடிக்கும்போது எவ்வளவு வெறி என்னுள் மிகுகின்றது தெரியுமா கோதை?

"தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்து கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்"
(சிலம்பு: இந்திரவிழ வூரெடுத்த காதை)

செல்வத்தை மலைமலையாகக் குவித்த அவனைக் கண்டு மேல் நாட்டோரெல்லாம் அழுக்காறன்றோ கொண்டு எழுதிக் குவித்தனர். இன்றைக்கு இத்துணை அவல நிலைக்குக் காரணம் என்ன? கோதை! வயிற்றுக்கில்லா குறையாலா நாம் செத்து மடிவது காணுமிடமெல்லாம் கால்வைக்குமிடமெல்லாம் நாம் காண்பது பசியினும் பிணியினும் மடிந்த பிணங்களன்றோ! ஈதென்ன துன்பம் நமக்கு ஐயோ! கோதை என்மனம் என்னபாடுபடுகின்றது தெரியுமா? மிகவிரைவில் இதற்கெல்லாம் முடிவு காணவேண்டும் என்று என்னுயிர் என்னுள் துடிக்கின்றது. என்னின் நிறைந்திருப்பது நீயல்ல கோதை! தமிழ் இனமும் தமிழுமே என்னின் ஒவ்வோர் அணுவிலும் நிறைந்துள்ளது. இவைகளைக்காப்பவர்க்கே என் உயிரும் உடலும் சொந்தம் அவர் பெரியார், என் பெரியார்; தமிழ்ப் பெரியார்!! நாட்டுப் பெரியார்!!!

அடுக்கடுக்கான உணர்ச்சியில் வார்த்தைகளைக் கொட்டித் தீர்ந்துவிட்டான் அவன் எழுச்சியில் அவன் உடல் நடுங்கியது. அவனின் உயர்ந்த நிலைகண்டாள் அவள். ஏதோ ஓர் உணர்ச்சி அவளின் உள்ளத்தை ஆட்கொண்டது. அவன் கைத்தலம் இருகப்பற்றி-

"அத்தான் தமிழ்த்தாயின் மடியில் புரண்ட நானும் ஓர் தமிழ் மகள்தான். நான் மட்டும் வாளாவிருப்பதோ? தங்கள் வழியே என்வழி எழுங்கள் போருக்கு என்று வீரிட்டு எழுந்தாள்.

"நீயன்றோ என் மனையாள்" என்றவ் வீர மகனைத் தழுவி, அக் காளை துள்ளுநடை போட்டான்.

★○★

கனவும் நனவும்

சென்னை, வே. தில்லைநாயகம் எம். ஏ.

அன்றில் இரட்டை அவனும் அவளும்!
இல்லற மென்னும் நல்லற வாழ்வில்
இணைந்து மகிழ்ந்தே இன்பந் துய்த்தனர்!
தன்னால் தேடிய தனத்தைக் கொண்டே
தானும் வாழ்ந்து தவிக்கும் சுற்றமும்
பேண எண்ணிப் பிரிந்தான் தலைவன்!
தண்ணீர் இன்றி தகிக்கும் பாலையைக்
கடந்து சென்றான் கருந்தனம் தேடவே!
பகற்பொழு தெல்லாம் பணமே குறியாய்
உழைத்தான் தலைவன் உறுதியாய் நாளும்!
கொளுத்தும் இரவி குளிர்ந்த மாலையில்
பசுவினம் மீளும் பாவையை நினைப்பான்
பணத்தை மறந்து பாவையை நாடும்
உள்ளம் ஒருகணம்! உவக்கும் நெஞ்சம்!
வந்த பணியோ வாட்டும் மறுபுறம்;
கன்னியும் காசும் கவலையைத் தருவர்!
அலுத்த உடம்போ அயரும்! ஆனால்
உள்ளம் ஊரில் உருகும்! பாவையை
எண்ணும்; விம்மும்; ஏக்கம் கொள்ளும்;
தூக்க மின்றித் துயரே உருவாய்
தவித்தான் தலைவன்; தாண்டின நாட்கள்!
அன்று தாளா அலுப்பின் விளைவாய்
கண்கள் செருகக் காளை அயர்ந்தான்!
வேனிற் காலம் வெடிக்கும் பாதிரி
மலரை யொத்த மயிரொழுங் குடைய
அழகுத் தேமல் ஆரணங் கவளைக்
கண்டான்! மகிழ்ந்தான்! கட்டித் தழுவினான்!
பிரிவுத் துன்பம் பேதையைப் போல
மறைந்தொ ழிந்தது! மங்கை யவனைப்
பிரிய மறுத்துப் பேசினாள் தொடர்ந்து:
"பணமே பெரிதாய்ப் பாவையைப் பிரிந்தீர்;
தகிக்கும் பாலையும் தாண்டி வந்தீர்;
உண்மையில் நீவிர் உற்ற இன்பம்
ஏதும் உண்டோ இயம்பும் எமக்கே!"
என்றே கேட்டு ஏந்திழை வருந்திக்
கண்ணீர் விட்டாள்; கனிந்தான் காளை!
அருகில் இழுத்தே அணைத்துச் சேர்த்து
வருத்தம் நீக்கி வாலிபச் சுவையை
உண்ண எண்ணி உறுத்துப் பார்த்தான்!
பார்த்த மங்கையைப் பற்ற நினைத்துக்
கைகளை நீட்டினான்! கன்னிஅங் கில்லை!
கண்ணைத் திறந்தான்; கனவே அனைத்தும்
என்ற தறிந்தான்; ஏங்கினான் தலைவன்!
"இருக்கும் பான்மையில் இல்லா ஒன்றைக்
கனவிற் காட்டிக் கருத்தை மாய்க்கும்
கனவே! வீணே கடுந்துயர் தந்தாய்
துணையைப் பிரிந்தார் தூற்றுவ ருன்னை"
என்றே ஏசினான் எழுந்த நினைவோ
அவனை மேலும், அலைக்க ழித்தது!
கனவும் நனவும் கடும்போ ரிட்டது!
அந்த நிலையை அனைவரு(ம்) அறிய
குறுந்தொகைப் பாட்டில் கோப்பெருஞ் சோழன்
தலைவன் கூற்றாய் தலைவன் நெஞ்சம்
தெள்ளத் தெளிய தீட்டும் ஓவியம்
காணீர் இன்பக் கவிதைச் சுவையை
சிறக்கப் பார்க்கலாம் செந்தமிழ் வடிவில்!
"வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன
மயிரேர் பொழுகிய வங்கலுழ் மாமை
நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல
இன்றுயில் எடுப்புதி கனவே
எள்ளார் அம்ம, துணைப்பிரிந் தோரே!"

விற்பனையாளர்கட்கு....

இதுவரை பணம் அனுப்பாத விற்பனையாளர் கட்கு முன்னறிவிப்பின்றிக் குயில் அனுப்புவது நிறுத்தபடும்.

– அமைச்சர்

விழிப்புணர்ச்சி

சு. முத்துசாமி

தமிழ்நாட்டின் தவப்பயனுகத் தோன்றிய பெரியார் தமது இனத்தின் எழுச்சிக்காகப் பாடு பட்டார். தமிழர்களது துரதிர்ஷ்டம் அவரது முழு வேலையும் வெற்றிகரமாக முடியவில்லை. தமிழர்களுக்கு அவர் ஊட்டிய விழிப்புணர்ச்சி நன்மைகளை விட தீமையே அதிகம் செய்துவிட்டது. அந்த தீர்க்க தரிசியின் அறிவிலிருந்து கிளம்பிய கருத்துக்கள் விலைமதிக்க முடியாதவை. அவை தூங்கிக் கொண்டிருந்த மக்களைத் தட்டி எழுப்பின. அடிமையாகச் சிந்திக்கும் திறனின்றிக் கிடந்தவர்களைக் கண் விழிக்கச் செய்தன. ஆனல் முழுமையாக அவர் விழிப்பூட்டும் முன், இவருடைய அறிவிலிருந்து கிளம்பிய ஒளிக்கதிர்களால் உலகிற்கு அறிமுகப் படுத்தப்பட்ட சில விட்டிற்பூச்சிகள் தடைக்கல்லாய் நிற்கின்றன. இவர் கூறுகிற கருத்துக்களைச் சிறிது மாற்றியோ அல்லது எதிர்த்தோ புத்தக வடிவில் எழுதிக் காசு சேர்ப்பதே இவர்கள் நோக்கம். தமிழர்களுக்கும், தமிழ் மொழிக்கும் தொண்டு செய்வதாகக் கூறிக்கொண்டு கண்டவைகளை எழுதிக் காசுசேர்ப்பதே இவர்களது வேலை.

ஏற்கனவே தமிழர்கள் இருந்ததுபோல சிறிதளவும் விழிப்படையா நிலையில் இருந்தாலும் பரவாயில்லை. பெரியார் தமிழர்களுக்கு ஊட்டிய சிறிதளவு விழிப்புணர்ச்சி இவர்களது ஏமாற்றத்திற்கே காரணமாகிவிட்டது. மொழிப்பற்று நாட்டுப் பற்று என்ற உணர்ச்சி அவர்களைக் கண்மூடித் தன மானவர்களைப் பின்பற்றத் தூண்டுகிறது.

நாட்டுப்பற்று வேண்டும்; சாதி பேதம் கூடாது. தமிழ்மொழியே நமது கண்கள்; என்று பெரியார் கூறினர். புரட்சிக் கவிஞர் போன்ருேர் தமது செந் தமிழ்க் கவிதைகளால் மக்களைத் தட்டி எழுப்பினர்கள். பாதி உணர்ச்சி பெற்ற மக்கள் இன்று பாதை தவறிச் செல்கின்றனர். அவர்களுக்குத் தெரியாது தாம் பாதை தவறிச் செல்கிருேம் என்பது.

பாரதிதாசனின் கவிதைகளைப் படித்துக்கூட்டத்தில் ஒப்பிப்பவர்கள் பெரிய பேச்சாளர்களாகவும், நாவன்மை படைத்தவர்களாகவும் புகழப்படுகிருர்கள். காப்பியடித்துக் கவிதை எழுதுபவர் சிறந்த கவிஞர் எனப் புகழப்பட்டு பெரும் விளம்பரம் பெறுகிருர். உண்மையிலேயே சிறந்த கவிஞர்கள் புறக்கணிக்கப் படுகிருர்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் தமிழர்கள் முழுவிழிப்புணர்ச்சி பெருமையேயாகும். தமிழின் பெயரைச் சொல்லிக் காசு சேர்ப்பதே தங்களது கடமையெனக் கொண்டு ஒருவர் இருவர் என்றில்லாமல் கட்டுப்பாட்டுடன் செயல்படும் அந்தக் கருங்காலிகளின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளும் அளவுக்குத் தமிழர்கள் இன்னும் விழிப்புணர்ச்சி பெறவில்லை. பெரியார் பிறப்பதற்கு முன் இக்கூட்டம் தோன்றியிருந்தால் தமிழர்கள் இவ்வாறு ஏமாந்திருக்கவே மாட்டார்கள். ஆனல் தந்தை ஊட்டிய உணர்ச்சியால் அரைகுறை விழிப்புணர்ச்சி பெற்றிருக்கும் மக்கள் ஏமாற்றப்படுகிருர்கள்.

தான் சார்ந்திருக்கும் பொருளிலிருந்து சத்தை உறிஞ்சிக் கொளுக்கும் சிலவகை நுண்கிருமிகள் இருக்கின்றன Parasite (பேரசைட்) என்று அவற்றிற்குப் பெயர். சாதகமான வெப்பமும் பிற பல சூழ்நிலைகளும் அமைந்திருந்தால்தான் அவை நன்கு வளர முடியும். இத்தகைய சாதகமான சூழ்நிலைகளை ஆங்கிலத்தில் Optimum Conditions என்று கூறுவார்கள். அதுபோல தந்தை பெரியார் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய விழிப்புணர்ச்சி, தமிழ் மக்களை ஏமாற்றும் இக்கூட்டத்தினர் நன்கு வளருவதற்குறிய Optimum Ccndition ஆக ஆகிவிட்டது தான் சார்ந்திருக்கும் பொருளையே உறிஞ்சிக் கொளுக்கும் Parasite போல, தனது நாட்டு மக்களையே ஏமாற்றி ஏற்றமிகு வாழ்வு நடத்தும் இக்கூட்டத்தினருக்குச் சாதகமான சூழ்நிலை ஏற்படுத்தியது இந்த அரை குறை விழிப்புணர்ச்சியான Optimum Condition தான்.

தற்போதுள்ள நிலையில் தமிழ்மக்கள் முன்னேறுவதற்குரிய சூழ்நிலையே இல்லை. அவர்களுடைய மனம் கெடுக்கப்படுகிறது, அவர்களுடைய காலம் வேண்டாத விழாக்களினலும், வெட்டிப் பேச்சுக் கச்சேரிகளாலும் விரயமாக்கப்படுகிறது. ஊரை ஏமாற்றி உண்டு கொளுக்கும் உலுத்தர்களின் பேச்சிலே மயங்கி தூங்குகிருர்கள். ஒரு சிலர் உயர்ந்த வாழ்வு பெறுவதற்காக ஒரு மாபெரும் இனமே காட்டிக் கொடுக்கப்படுகிறது. இன்றுள்ள நிலையில் தமிழர்கள் அந்த ஏமாற்று வித்தைக்காரர்களைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு விழிப்புணர்ச்சி பெறவில்லை. இதே நிலையில் இன்னும் சிறிது காலம் சென்ருல் அரை குறை விழிப்புணர்ச்சி உள்ளவர்களும் முழுதூக்கம் உள்ளவர்களாக மாறிவிடுவார்கள் என்பது திண்ணம்.

தமிழுக்கு மீட்சி

சென்னை, இறையனார், பி. ஏ.,

தமிழ்நாடு தமிழருக்கே ஆக அன்றே
தனிமையிலே தன்மான இயக்கஞ் சொன்ன
தமிழ்நாட்டுப் பிரிவினையை எதிர்த்தா ரியர்க்குத்
தாசர்களாய் இன்றிருப்போர் குதித்த துண்டு!
அமிழ்தொத்த தமிழ்ப்பயிரை எருமை இந்தி
அழித்துண்ண விட்டதுண்டு! வடநாட் டானைத்
தமிழ்நாட்டை வாணிபத்தால் சுரண்ட விட்டுத்
தற்கொலைக்கே இன்றவர்கள் முயல்கின் றார்கள்

வடநாட்டான் சுரண்டலுக்கே இந்த நாட்டை
வலிந்துகொண்டு விடுவதுபோல் தமிழ ரெல்லாம்
வடநாட்டின் இயக்கத்திற் கடிமைப் பட்டு
வணிகத்தை பனியாக்கள் வசத்தில் விட்டுப்
படம்போட்டு வடவர்களின் பகட்டாற்
[கெட்டுப்
பத்திரிகை பலவற்றை உலவ விட்டு
நடம்பாட்டுக் கூத்தெல்லாம் நடக்க விட்டு
நாசமுற வழியன்றோ வகுக்கின் றார்கள்!

தமிழ்நாட்டில் இந்திக்கா திக்கந் தந்து
தமிழுக்கே அழிவன்றோ தேடுகின்றார்!
தமிழ்நாட்டு வணிகத்தை வடவர்க் காக்கித்
தம்நாட்டு வளத்தையெலாம் இழக்கின் றார்கள்!
தமிழ்நாட்டுத் தமிழ்க் கொள்கைவிட்
[டார்யத்துத்
தறுதலைகள் காட்டியதீக் கொள்கை நாடி
உமிழ்கின்ற நிலையுற்றே ஊனப் பட்டே
உழல்கின்றார் இன்றுள்ள தமிழ ரெல்லாம்!

தனிநாடு வேண்டுமெனில் அதனை எந்தத்
தன்மையிலே தகைமையிலே அமைக்க
[வேண்டும்?
இனிநாடே எவர்கையில் வருதல் வேண்டும்?
ஏற்குமந்த தனியரசிற் பங்கு கொள்வோர்
தனிநாட்டு மக்களிலே எவரெ வர்கள்?
தமிழர்களோ? ஆரியரோ? என்ப தெல்லாம்
இனிநாட்ட வேண்டுமிக எண்ணிப் பார்த்தே
எதிர்கால அரசியலை வகுக்க வேண்டும்!

வகுக்குமந்த அரசியலை வடநாட் டானின்
வலையினிலே சிக்காது தடுத்துக் கண்ணீர்
உகுக்கின்ற தொழிலாளி உழவு செய்யும்
உழைப்பாளி என்போரின் குறைகள் நீங்க
வகுக்கின்ற திட்டங்கள் நமக்கு வேண்டும்!
வாழ்க்கையிலே மறுமலர்ச்சி வேண்டும்!
[நம்மைப்
பகுக்கின்ற சாதிமதப் பூசல் நீங்கப்
பகுத்தறிவின் இயக்கமது வளர வேண்டும்!

வழிவகுத்தார் ஈரோட்டுப் பெரியார்! இன்ப
வாழ்வடையத் திராவிடந்தான் குறிக்கோள்
[என்றே!
பழிகூட்டும் ஆரியரின் சூழ்ச்சிக் கெல்லாம்
பகலவன்போல் பகுத்தறிவு இயக்கங் கண்டே
"அழிவூட்டும் வடநாட்டின் ஆதிக் கத்தை
அணுவளவும் இந்நாட்டில் அனும தித்தால்
குழிகாட்டும்! குறைகூட்டும் அடிமை யாட்சி
குதியாட்டம் போடும்பார்!" என்று சொன்னார்.

சமுதாய நலிவந்த நாட்டில் ஆர்யம்
சாகுங்கால் இருக்காது! வடநாட் டானின்
அமுலாக அரசியலும், வணிக வாழ்வும்
அமையுவரை அடிமைமுறை மாறு மோ?நற்
றமிழுக்கே எதிராக இந்தி நஞ்சு
தழைக்கும்வரை தமிழுக்கு மீட்சி யுண்டோ?
நமதாட்சி வேண்டுமெனில் இந்த மூன்று
நலிவுகளை முதற்கண்ணே நீக்க வேண்டும்!

ஆகவே இன்று நமக்குள்ள வேலை தமிழர்களை முழுவிழிப்புணர்ச்சி பெற்ற மக்களாக மாற்றுவதே ஓரளவு தெளிவான அறிவுள்ளவர்களோடும் அல்லது ஒன்றுமே தெரியாதவர்களுடனும் வாதிட்டோ அல்லது உண்மைகளை எடுத்துக்கூறியோ அவர்கள் உணருமாறுசெய்யலாம். ஆனால் ஒன்றுமே தெரியாமல் ஆனால் தெரிந்ததாக எண்ணிக்கொண்டிருக்கும் அப்பாவிகளுக்கு உண்மைகளை எடுத்துக்கூறி அவர்களை உணரச் செய்வதென்பது உண்மையிலேயே மிக மிகக்கடினம். தமிழர்கள் பின் குறிப்பிட்டது போன்ற பாதி விழிப்புணர்ச்சியுடன், எல்லாம் தெரிந்ததாக எண்ணிக்கொண்டே ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களை முழுமையாக விழிப்புணர்ச்சி பெற்ற வீரர்களாக மாற்றுவது நமது கடமை. இவ்வேலை மிகவும் கடினமான ஒன்று பாதி உறக்கத்தில் இருக்கும் தமிழர்களைத் தட்டி எழுப்பி உண்மையை அவர்கள் உணருமாறு செய்ய வேண்டும். அரைகுறை விழிப்புணர்ச்சியின் மூலம் ஏற்பட்ட, ஏற்படுகிற தீமைகளுக்கு ஒரு முடிவு கட்டி, முழுவிழிப்புணர்ச்சியுள்ள, பொறுப்புள்ள, உண்மைகளை உணரும் திறனுள்ள, மக்களாகத் தமிழர்களை மாற்றுவதுதான் இன்று நம்முள் உள்ள முக்கிய வேலையாகும்.

உவமை நலமும் உருகு நிலையும்

கயல்விழி

அதோ தெரிகிறதே, அந்த ஆற்றுப் படுகரின் வெண்மணற் பரப்பில் வியனுலகை மறந்து அமர்ந் திருக்கும் அந்தக் காதற் திருவுருவங்களின் எழில் வண்ணத் தோற்றத்தை நோக்குங்கள். அவர்கட் கிடையில் அதிக இடைவெளி கூட இல்லையே.

ஆ! அவளது தோற்றத்தில்தான் எவ்வளவு அழகு. எவ்வளவு கனிவு. அவளது எழில்வண்ணத் தோற்றம் பொன்வண்ணச் சிலையா? அன்றிப் பூத்துக் குலுங்கிப் பொங்கி நிற்கும் இளமையா?

அந்தச் சிற்றிடையாளின் மெருகேறிய மேனி எதையோ நினைவுபடுத்தியதே. ஆம். சித்தத்தைக் கலக்கிய அந்தச்சிலை. தந்தத்தில் கடைந்தெடுத்து மெருகேற்றி விற்பனைக்கு நிறுத்தி வைத்திருந்த அந்தச் சிலையேதான்.

அதோ! அவள் தன் முகத்தை இப்பக்கம் திருப்புகிறாளே. அடடா? ஒளி உமிழ்ந்து எழில் தவழ்ந்து நிற்கும் அந்தப் பொன்வண்ணப் புதுமுகம் உள்ளத்தைக் கலக்குகின்றதே. அந்தோ, அந்தத் தெள்ளமுதத் திருமுகத்தை இன்னும் சிறிது நேரம் கண்களால் தீண்டி விழுங்கி மகிழுமுன் திருப்பிக் கொண்டாளே!

அவள் உதடு அசைகிறதுபோல் தெரிகிறதே. ஆமாம். தன் இன்னுயிர்க் காதலனுடன் ஏதோ கொஞ்சிப் பேசுகிறாள். நமக்குக்கூடக் கேட்கிறது போல் தோன்றுகிறதே.

வல்ல தமிழ் இசைஞன் தானூதும் வேய்ங் குழலின் கானக் குரல் பெருக்கிக், கள்ளூறும் இதழ் குவித்து அன்பே என்றழைத்தாள் உணர்ச்சி பொங்க. ஆரமுதே என்றான் அந்த அடலேறு.

நல்ல வெண்மணற் பரப்பு. வானக் கருங் கடலில் வெள்ளி ஓடம் ஒன்று விரைந்தசைந்து ஆடி மகிழ்ந்து செல்வதுபோல் கருவானில்வெண்ணிலவு தண்கதிர் பரப்பி மெல்ல மிதந்து சென்றுகொண் டிருந்தது.

தும்பி திறக்கத் தேனூறும் தண் மலர்கள் நறு மணத்தை அள்ளி வீசி அவர்கட்குப் போதையூட்டி நின்றன. இதற்கிடையில் பொதிகைத் தென்றல் தவழ்ந்தாடி வந்து திருநுதலாளின் தேன்உடம்பைத் தொட்டுத் தழுவிச் சுவைபார்த்து விளையாடித் தன் வழி சென்றுகொண்டிருந்தது.

தென்றலும், நிலவும், தேனூறும் திருமலரின் நறுமணமும் சூழ இருக்க, எழில்வண்ணச் செம் பொற்சிலையொன்றை அருகமர்த்தி, ''அன்பனே! உளங்குளிரப்பார்த்து மகிழ்; கசக்கிப் பிழிந்து பருகி விடாதே'' என்றால் யார் அதை ஏற்கவல்லார்?— அந்நிலையில்.

கண்கள் ஒன்றையொன்று கௌவிக் கடித்துத் தின்று கலந்தாடி சுவைத்து மகிழ்ந்தன. அப்பாவை நல்லாளின் போதைப் பெருவிழியிலிருந்து புறப் பட்ட ஒளிக்கற்றையின் காதல் வெப்பம் இவனை நிலைகுலையச் செய்தது. அவளது எழில் கண்டு இவன் களிகொண்டு தழுவ விரைந்தான்.

மையல் மிக ஊட்டி அவளும் பைய நெருங் கினாள். மத்தேறி உடைதயிர்போல் மனமுடைந்து செயல் குறைந்து ஒன்றி மகிழ்ந்தனர். தெளிவின் திருப்பத்திலே தன் உயிரனையாளைப் பிரிய மன மின்றிப் பிரிந்து சென்றான்.

காலம் என்னும் கணக்கேட்டில் திங்கள் ஒன்று பொறிக்கப்பட்டது. தேன் மொழியாளின் தளிர் மேனியைக் கூடி முயங்க விழைந்து நாடி நின்றான் அவன்.

அவள் அடைபட்டக்கிள்ளையானாள். ஆடி ஓடிச் செல்ல முடியாத காலற்ற மானானாள். தனது காதல னது தோளைத் தொத்தி நின்று பற்றித் தழுவி மகிழ முடியாத தையலானாள்- சுருங்கக் கூறின் அவளது பெற்றோரது காவல்பெருகி வளர்ந்து அவளைச்சுற்றி வேலியிட்டு வரம்பமைத்து நின்றது.

படிக்க ஏடெடுத்தான் அந்த ஏட்டின்எழுத்தாக நின்று புன்முறுவலைச் சிந்தினாள். வானத்தில் நில வாக நின்று நகைத்தாள் விண்மீனாக நின்று தனது நளின மேனியை அவனது நடுவிழியில் நிறுத்தினாள் காணுமிடமெல்லாம் அவளது கயல்விழியும் குமிண் சிரிப்பும் ஒளி உமிழ்ந்து எழில் தவழ்ந்து நிற்கும் பளிங்கு முகமும்தான்.

கண்ணிற் புகுந்து கருத்தளித்த அந்தக் காரி கையை, உள்ளத்தில் நுழைந்தாடும் ஒளிஓவியத்தை கள்ளத்தில் களவு கொண்ட காதலியை எண்ணி னான்; மகிழ்ந்தான். மறு நொடியில் கூடிப்பிரிந்த கொம்பனையைக் காண முடியவில்லையே என ஏங்கி

னுன். ஏக்கப் பெருமூச்சு வெய்துயிர்ப்பாய் இழையோடி வெளிவந்தது.

நினைத்தான்; நலிந்தான். கடந்தவைகளைக் கண்முன்கொணர்ந்து நினைவுகளைக்கூட்டி அதில் அந்த மெல்லியலாளின் ஒவ்வொரு உறுப்பினையும் கண்டு நோக்கிக் காதலித்துச் சுவைத்தான். கால் நொடியில் நினைவு கலையவே நிலை குலைந்தான், உடல் மெலிந்து உள்ளம் தளர்ந்து நாளுக்குநாள் வாட்டமுற்று நைந்து நலிந்து துவண்டு கிடந்தான்!

கன்றெனக் குதித்துத் துள்ளித்திரியும் பள்ளிப் பருவம் முதற்கொண்டு தெரியும்–இந்தத் தோழன் "அந்தச் சுவை மொழியாளை எண்ணி நலிவது உனது பெருமைக்குத் தகவல்ல. எனவே உள்ளத்தில் உரனேற்றித் தெம்புடன் இரு. என்றுகூறினுன்–அந்தத் தோழன்.

"என்னை இவ்வளவு இடித்துக் கூறுகின்றுயே ஒழிய, இந்த நோயைத் தீர்க்க வழியொன்றைக் கூறமுடியவில்லையே உன்னுல்" என்று கூறி மேலும் தொடர்ந்தான்.

"நண்பகல் நேரம். சுடர் கதிர்ச் செல்வனின் முழுவெப்பமும் அந்தப் பாறையின் மீது பட்டு வெப்பேறிக் கொதித்து நிற்கிறது. அதன்மீது இருக்கும் வெண்ணெய்யைக் காக்கக் கையில்லாத ஒரு ஊமையன் அங்கு நிற்கிருன்.

அந்த வெண்ணெய் உருகி வழிந்தோடுவதைத் தடுத்து நிழலின்கண் எடுத்துவைக்கவோ அவனுக்குக் கையில்லை. அருகிருப்போரைக் கூவியழைத்து அவர்கள்மூலமாவது இதை உருகவிடாது காப்பாற்றலாம் என்றுலோ கூவியழைக்க வாயில்லை. காக்க முயன்று பார்க்கிருன். வழியில்லை வருந்தி வருந்திநெஞ்சுள்ளே புழுங்கிச் சாகிருன்.

இது போலத்தான் நான் காதலியின்பாற் சென்று அவளை அடைய முடியாத கையற்றவன் போலவும். இது தனது காதலியாகிய பெண்ணைப் பற்றிய மறை பொருளாகலின் பிறரிடம்கூறி அவளை அடையமுடியாத ஊமையாகவும் இருந்து, வெப்பேரிய பாறையில் பட்டு உருகும் வெண்ணெய் போல மெலிகிறேன்" என்றுன்.

காதலியின் கருங்குழலும், செவ்வாயும், கண் மலரும், காதும், உள்நிவந்த நகையும் இவனது நெஞ்சத்தே தோன்றித் தோன்றி காம எரியூட்டி நின்றது. அந்த நெஞ்சத்தை வெப்பேறிச் சூடு பறக்கும் பாறைக்கு ஒப்பிட்ட உவமை நலங் கண்டு உள்ளூற மகிழ்வதைத் தவிர வேறு என்ன கூற வல்லோம்?

வெப்பத்தில் வெண்ணெய் உருகாதிருக்கத் தண்ணிழல் வேண்டுவதுபோல தனது உடலாகிய வெண்ணெய் உருகாதிருக்கத் தலைவியின் ஆதரவாகிய நிழல் வேண்டும் என்று கூறி உருகுநிலையில் உவமை நலங் காட்டியதை எண்ணி எண்ணி மகிழ்க.

தலைவனது செயலற்ற நிலைகண்டு, கையற்ற ஊமையனுக்கு அவனை ஒப்புக்கூறியமையை எண்ணி, நோக்கி, நினைந்து மகிழ்ந்து இன்புறுக.

அந்த ஊமையன் வெண்ணெய் உருகாதிருத்தலையே பெரிதும் விழைகின்றதுபோல் தலைவன் தனது உடல் மெலியாதிருத்தலையே பெரிதும் விரும்புகின்றுன். எனினும் வெம்மையால் வெண்ணெய் உருகும்பொழுது கையில்லா ஊமையனுல் அதைத்தடுக்கஇயலாததுபோலக் காமவெப்பத்தால் தன் உடல் மெலியாதிருத்தலை அவனுல் தடுக்க இயலவில்லையாம்.

"இடிக்குங் கேளிர் நுங்குறை ஆக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே"

(குறுந்தொகை 58)

எழுத்தாளர்கட்கு...

கதை, கட்டுரை, கவிதை அனுப்புபவர்கள் தங்களது முகரிவயுடன் அனுப்புக.

முகவரி இல்லாதவைகள் பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

மொழி

இரத்தின - குலிசன், கீரமங்கலம்.

அமுதொழு குந்தமிழ் அன்னையுண்டே—அவள்
ஆக்கிச் சமைத்த கலைகளுண்டே
இனிமை யுடன்நாம் உண்டுமகிழ்ந்திட
இன்னும் பிறமொழி வேண்டுமோடி?

கன்னித் தமிழெழில் காணலுண்டே – அதில்
காளையர் தம்முளங் கோடலுண்டே
இன்னமுதே மக்கள் இன்பமாய்வாழ்ந்திட
இன்னும் பிறமொழி வேண்டுமோடி?

வாழ்க்கை முறைதனைத் தானுணர்ந்தேகொள்ள
வான்புகழ் வள்ளுவன் தந்ததுண்டு
சேர்க்கைபலகொண்டுஒன்றுபோல்தோன்றிடும்
சொத்தை மொழியின்னும் வேண்டுமோடி?

விஞ்ஞானம் முன்பிதில் வேணவுண்டு-பின்னர்
வீணர்க ளாலது வீழ்ந்ததுண்டு
கண்மணி யேயிதில் இக்கலை மண்டிடக்
கன்னல் தமிழின்றி வேறெதற்கு?

ஆழிசூ ழுலகஞ் சுற்றிடினும் – இன்னும்
ஆங்குளோர் நட்பினைப் பெற்றிடினும்
ஆழியுலகுளோர் தாமுணர்ந்த நல்ல
ஆங்கிலம் தமிழிவை போதுமடி!

கலைந்த கனவு!

பழனி - திருமாறன்

பாரதியார் கவிதைகள் - மலிவுப் பதிப்பு
நெஞ்சிற் கிடந்தது - நினைவோ பறந்தது!
ஏடெடுத்துக் கவிதை - எழுதிய வண்ணம்
பாட்டுக்கொரு புலவன் - கற்பனைப் பூங்காவில்

இருந்திடக் கண்டு - இன்பமே கொண்டு
அய்யா வணக்கம்! அடியேன் தங்கள்
தாசனின் தாசன்! பெயர் திருமாறன்;
என்றதும் அவர்தான் - இதயம் மகிழ்ந்து

வாயினைத் திறந்தார். - சுவைநீர் வந்தது
அருந்திய பின்னர் - அரும்பிய பேச்சிது!
என்னுடைத் தாசன் - எப்படி யுள்ளார்?
முத்துக் குறுநகை – மின்னிடக் கேட்டார்!

செப்படி வித்தைச் – சிறுநரிக் கூட்டம்
வெட்கிடும் வகையில் - வளர்ந்தே விட்டார்;
இளநகை பூத்திட – இப்படிச் சொன்னேன்!
இம்மொழி கேட்டதும் – எகிறிக் குதித்தே

கொடும் பசியாலே - என்னைக் கொன்ற
பாவிகள் அவரே! பாவிகள் அவரே!
இல்லையா தம்பி? என்றே மகிழ்ந்தார்!
எட்டய புரத்தின் - சிறப்பினை எடுத்தே

விளக்கிச் சொன்னேன் – வேதனைப் பட்டே
"இருப்பின் தூற்றுவர் - இறப்பின் போற்றுவர்"
இதுதான் தம்பி – உலகம் என்றார்!
கண்கள் நனைந்தன - கனவும் கலைந்ததே!

தேவை

"குயில்" விற்பனையாளர்
இல்லாத ஊர்களில்
விற்பனையாளர்கள் தேவை.

விவரங்களுக்கு;

அமைச்சர்
குயிலகம், புதுச்சேரி.

குயில்
Regd No. M. 7030

பெரியாரைப் பின்பற்று

பெரியாரிடத்தில் பிழைசெய் யாதே!
பெரியாரிடத்தில் பிழைசெய் தவர்கள்
வாழ்கின் றார்என் றெண்ணுதல் மடமை!
அவர்கள் வாழ்கிலர்; மாய்கின் றார்கள்.

பெரியார் தம்மைப் பின்பற்ற வேண்டும்
பெரியார் தம்மைப் பின்பற்று கின்றவர்
மாய்கின் றார்என எண்ணுதல் மடமை
அவர்கள் மாய்கிலர்; வாழு கின்றனர்.

சாக வேண்டிய தமிழர் சாகிலர்;
வீழ வேண்டிய தமிழர் வீழ்கிலர்!
வறள வேண்டிய தமிழகம் வறண்டிலது
காரணம் பெரியார் கண்கா ணிப்பே!

அன்னார் நினைப்பெலாம் தமிழர்க் கேயாம்
உரைப்பன தமிழர்க் குறுதி பயப்பன
அவர்தாம் தமிழர்க்குத் தமிழகம் அளிப்பவர்

அந்த முதியோர் ஆற்றலைத் தாண்டிநீ
எங்கே ஓடி எதுபெற முடியும்?
மலையுச்சிக் கப்பால் பிலத்தின் கீழ்ப்படி!

புகழ்வேண் டாமா உனக்கு? மிகமிக
அறம்வேண் டாமா உனக்கு? நிறம்பல
கூறித் தமிழரைக் கொல்வார் குதிகால்
நரம்பை வெட்டுதல் நல்ல தொண்டல்லவா?
என்செய வேண்டும் இதற்கெலாம் எண்ணுக!
என்றும் பெரியார் நன்னெறி பற்றுக!

தப்புக் கணக்குப் போடாதே
செப்பேட்டில் உன்புகழ் செதுக்குக நீயே!

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா, தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.